# யார்,
# ன்
# இந்தப் பொலிஸ்காரர்

# ?

## கவிஞர் மருதூர்க்கனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த பொலிஸ்காரர்


கவிஞர்

மரு தூர்க்கனி

மூத்த துணைத்தலைவர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

"தாருஸ்ஸலாம்"

51, வொக்ஸ்ஸோல் லேன்,

கொழும்பு - 02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எட்டப்பர்களையும், அபூஜஹில்களையும், யஸீதுகளையும் வரலாற்றில் படித்திருக்கின்றோம். காட்டிக் கொடுப்பவர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கண்ணால் தரிசிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அந்த அரியவாய்ப்பை எல்லாம் வல்ல அல்லாஹ் அம்பாரை மாவட்ட முஸ்லிம்களுக்கு அளித்திருக்கின்றான்.

இந்தக்கைநூலுக்கு அணிந்துரை ஒன்று அவசியமில்லை அவசியமில்லை. இருப்பினும் கூட எமது கட்சியின் மூத்த துணைத்தலைவர் கவிஞர் மருதூர்க்கனி அவர்கள் இக்கை நூலுக்கு கொடுத்த மகுடம் "யார் இந்த பொலிஸ்காரர்?" என்பதாகும். அதை, "யார் இந்த பொலிஸ்காரன்?" என்று மாற்றிய வேலையை மாத்திரம் நான் செய்திருக்கிறேன்.

இவ்வளவு காலமும் ஆகக்குறைந்தது உயர்மட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரிக்காவது தைரியமும், மனத்திடமும் அச்சமின்மையும் இருக்குமென்று நம்பியிருந்தேன். நண்பர் மஜீத் எங்களைக் கைவிட்டது முக்கியமல்ல. 'இவரைப் போன்ற இன்னும் பத்துப்பேராவது பொலிஸ் இராணுவ சேவையில் இருப்பதனால் தானோ என்னவோ வடக்கு கிழக்கு யுத்தம்கூட முற்றுப்பெறாதிருக்கின்றது' என்று, எம்மை எண்ண வைத்திருக்கின்றது.

இன்றிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஒவ்வொருவரும் தமது ஐவேளை பிரார்த்தனைகளிலும் "கோழைத்தனத்தை என்நெஞ்சிலிருந்து பிடுங்கி விடுவாயாக" என்று பிரார்த்திக்க வேண்டும்! எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அல்லாஹ் நம் அனைவரையும் நேர்வழியில் நடத்துவானாக!

எம். எச். எம். அஷ்ரஃப்
தலைவர்,
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
"தாருஸ்ஸலாம்"
51, வொக்ஸ்ஸோல் லேன்,
கொழும்பு - 02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அந்த பொலிஸ்காரரோடு முகப்பழக்க மில்லை. ஆயினும் அவரது சமூக உணர்வுகளைப் பற்றி கொஞ்சம் கேள்விப்பட்டிருந்தேன். அவர் தனது சொந்த இன்பதுன்பங்களால் பச்சைப் பேரினவாதச்சிறையிலிருந்து மீளமுடியாமல் ஊசலாடிக்கொண்டிருந்ததையும் அறிந்து வைத்திருந்தேன்.

## 1989 தேர்தலிலும் போட்டியிட விரும்பினார்

1989 பாராளுமன்றத்தேர்தலிலும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவதற்கும் அவர் விரும்பியிருந்தார். ஆனால், பச்சையின் மீதும் அவரது உயர்ச்சியின் மீதும் அவர் கொண்டிருந்த காதலை அவரால் மறக்கமுடியவில்லை என்பதை, அவரது மனநிலை பேச்சு தூது என்பவற்றிலிருந்து எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது.

## காலடிவைக்க முன்பதாகவே.....

கட்சிக்குள் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னரே பொலிஸ்காரத்தனமாக "நியமனமமும் வேண்டும் தேர்தல் முடிவின்பின் பச்சைக்கட்சியையே ஆதரிக்கவும் வேண்டும்" என்று, நிபந்தனை விதிக்கவும் அப்போது முன்வந்தார்.

அதுமாத்திரமன்றி அவரது தனிப்பட்ட பதவி உயர்ச்சிக்காக சமூகத்தின் எந்த நன்மையையும் காட்டிக் கொடுப்பதற்கு தயாரான நிலையிலும் அப்போது காணப்பட்டார். ஆனகாரணங்களால் அவருக்கு அப்போது முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

## நாம் கூறிய தீர்க்கதரிசனம்

1989 பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சியில் அவர் போட்டியிட்டார். போட்டியிட்ட வேட்பாளர் மத்தியில் கூடுதலான தெரிவு வாக்குகளையும் பெற்றார். (ஏறக்குறைய 10,000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், வெற்றி பெற முடியவில்லை. அதற்கு பதிலாக முஸ்லிம்களின் வாக்குகளினால் சிங்களப்பிரதிநிதிகள் மூன்றுபேர் தெரிவுசெய்யப்படுவதற்கு பெரிதும் உதவினார்.

நாம், அந்த தேர்தல் பிரசாரத்தின் போது திருப்பித்திருப்பி மேடைக்கு மேடை "முஸ்லிம்கள் ஐ.தே.க கட்சிக்கு அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும் ஐ.தே.கட்சியில் போட்டியிடும் மூன்று சிங்களவர்களையே தெரிவு செய்ய உதவும்!" என்று கூறினோம். ஆனால், அது செவிடன்காதில் ஊதிய சங்குபோலவோ அல்லது தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறு போலவோ அப்போது அமைந்துவிட்டது.

## ஐ.தே.கட்சிக்கு அளித்த அநியாயமான வாக்குகள்

அதன் விளைவு 25,000 முஸ்லிம் வாக்குகளை ஐ.தே.கட்சிக்கு அள்ளிப்போட்டும், மூன்று சிங்களவர்கள் தெரிவு செய்யப்பட்டார்களே தவிர, ஒரு முஸ்லிம் கூட தெரிவு செய்யப்படவில்லை. "இதுதான் நடக்கும்" என்று முன்கூட்டியே நாம் கூறியிருந்தோம். அது நடந்திருந்தது. அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தாம் செய்த அந்த பெருந்தவறுக்காக வருந்தினர். அழுது சலித்தனர். "மீண்டும் அந்த தவறைச் செய்யமாட்டோம்" என்று, பகிரங்கமாக கூறினர். ஆனால் முஸ்லிம் சமூகத்தை காட்டிக் கொடுத்தே சந்தோஷமடையும் ஒரு துரோகக்கும்பல் தனது "அசலை" வெளிப்படுத்திக்கொண்டே இருந்தது. ஆயினும் மக்கள் எழுச்சி, சக்திக்கு முன்னால் அந்த சமூகத் துரோகிகள் புறமுதுகுகாட்டி ஓடுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

## அம்பாறை தொகுதிக்கு மாத்திரம் நான்கு எம்பீக்கள்

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய மூன்று முஸ்லிம் தொகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டிய தனித்துவமான மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவதற்கிருந்த பாக்கியத்தை இழப்பதற்கு இந்தப் பொலிஸ்காரரர்தான் முதற்காரணமாக இருந்தார்.

அப்போது 25,000 முஸ்லிம் வாக்குகளை ஐ.தே.கட்சிக்கும் 10,000 முஸ்லிம் வாக்குகளை ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் அள்ளிப்போட்டு ஐ.தே.கட்சியில் மூன்று சிங்களப் பிரதிநிதிகளும், ஸ்ரீ.ல.சு.கட்சியில் ஒரு சிங்களப்பிரதிநியுமாக, அம்பாறைத்தொகுதிக்கு மாத்திரம் நான்கு சிங்களப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இது இலங்கை அரசியலில் - இந்த தேர்தல் அமைப்பில், நடந்த மாபெரும் புதுமை மாத்திரமல்ல முஸ்லிம்கள் ஏமாந்த வரலாறுமாகும். முஸ்லிம்கள் பேரினவாதக்கட்சிகளுக்கு அளித்த வாக்குகளினால்தான் நான்கு சிங்கள எம்பீக்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அம்பாறை மாவட்ட சிங்கள பௌத்த பேரினவாதம், திட்டமிட்டு தனது மூன்று தெரிவுவாக்குகளையும் மூன்று சிங்களவர்களுக்கு அளித்து மூன்று பிரதிநிதிகளைத்தேடிக் கொண்டனர். பாவம் ஐ.தே.கட்சிக்கு வாக்களித்த முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டனர்.

அந்த 1989 தேர்தலின் போது அம்பாறை மாவட்டத்தில் ஆக அறுநூறு வாக்குவித்தியாசத்தில் முஸ்லிம் சமூகம் தனது தனித்துவமான மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளை இழந்தது.

## பிராயச்சித்தம் தேடி

அந்த தேர்தலில் அறிந்தோ அறியாமலோ அம்பாறை மாவட்ட முஸ்லிம்களில் சிலர் செய்த அந்த மாபெரும் வரலாற்றுத்தவறுக்கு பிராயச்சித்தம் தேடுவதற்காகவும் தமது தனித்துவத்தை நிலைநாட்டுவதற்காகவும் ஒரு பொதுத்தேர்தலை எதிர்பார்த்திருந்தனர். அதற்கிடையில் தமது உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதற்கு வசதியாக பிரதேசசபைத்தேர்தல் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் வென்றது

அம்பாறை மாவட்டத்தின் மூன்று முஸ்லிம் தொகுதிகளிலும் வாழும் முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸை மிகப்பெரும்பான்மையாக ஆதரித்து வெற்றிபெறச் செய்தனர்.

கல்முனையின் முழு அமைச்சருடனும் சம்மாந்துறையில் அரை அமைச்சருடனும் அந்த பெரிய பொலிஸ்காரரும் சேர்ந்து, அரசின் முழுச் சக்தியைப் பாவித்தும் அவர்களின் கட்சி படுதோல்வி அடைந்தது. மக்களின் விடுதலை உணர்வு வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து முஸ்லிம்களின் ஒரேகுரல் முஸ்லிம் காங்கிரஸ்தான் என்று நிரூபிக்கப்பட்டது.

## வரலாறு கண்டறியாத ஜனசமுத்திரம்

அதைத்தொடர்ந்து, கல்முனை நகரில் நடைபெற்ற கட்சியின் 12வது தேசிய எழுச்சி மாநாட்டில், இலங்கை முஸ்லிம்களின் வரலாறு கண்டறியாத ஜனசமுத்திரம் திரண்டது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட சிங்கள, தமிழ், மலையக கட்சிகளின் தலைவர்களிடையேயும் ஏனைய ஸ்தாபனங்களின் தலைவர்களிடையேயும் அந்த மாநாடு, பெருந்தாக்கத்தையும் மனமாற்றத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. "முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தின் கீழ், குறிப்பாக, அதன் தேசியத்தலைவர் அஷ்ரஃப் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்று திரண்டு விட்டார்கள்" என்று, அங்கு வந்திருந்த தலைவர்கள் தாம் கண்ட நிதர்சனத்தை நாடு முழுதும் பிரகடனம் செய்தார்கள்.

## தேர்தல் சபதம்

அம்பாறை மாவட்ட பிரதேச சபைத் தேர்தலின் போது, தலைவர் அஷ்ரஃப் அவர்கள், "அம்பாறை மாவட்டத்தின் ஆறு பிரதேச சபைகளில் ஒன்றைத்தான் இழக்க நேர்ந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பாராளுமன்றப்பதவியை இராஜினாமாச் செய்வேன்" என்று சபதம் எடுத்திருந்தார்.

அதனால், எப்படியாவது அரசின் எந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தாவது முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்குரைலை அழித்து விட வேண்டுமென்று செயற்பட்ட அமச்சர்களோடு இந்த பெரிய பொலிஸ்காரரும் முக்கிய இடம் பெற்றிருந்தார்.

## ஆனாலும்..சேர்க்கத் தயாராக இருந்தோம்

பொத்துவில் பிரதேச சபை எல்லைக்குள் அதிகார துஷ்பிரயோகம் அவிழ்த்துவிடப்பட்டு தமிழ் வாக்குகள் வேட்டையாடப்பட்டதன் காரணமாக சில வாக்குகள் வித்தியாசத்தில் பொத்துவில் பிரதேச சபையை முஸ்லிம் காங்கிரஸ் இழப்பதற்கும், தலைவர் பாராளுமன்றப்பதவியை இராஜினாமாச் செய்வதற்கும் இந்தப் பொலிஸ்காரரும் காரணமாக இருந்தார். ஆயினும், முஸ்லிம் சமூகத்தை ஒன்றுபடுத்தும் முயற்சியிலும் அம்பாறை மாவட்டத்தின் மூன்று தனித்துவமான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை காப்பாற்றும் நோக்கத்திற்குமாக இந்தப் பொலிஸ்காரரையும் கட்சியில் சேர்ந்துக் கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருந்தோம்.

## திடீரென்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

திடீரென பாராளுமன்றம் கலைக்கப்பட்டது! வடகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக "தொண்டமான் அஷ்ரஃப் யோசனைகள்" ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டிருந்தன. "அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் திரு தொண்டமான் அவர்களால் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கவனத்திற்கு அது எடுத்துச்செல்லப்படும்" என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அதற்கு ஆளும் அரசாங்கத்தலைவரிடமிருந்து எதுவித பதிலும் அளிக்கப்படாத நிலையில் திடீரென்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அப்போது, அரசியல் அவதானிகள் மத்தியில் "ஜனாதிபதி, "தொண்டமான் - அஷ்ரஃப் யோசனைகளுக்கு" முகம் கொடுக்க முடியாமல் போனதும் பாராளுமன்றம் கலைக்கப் படுவதற்கு நிமித்த காரணமாக அமைந்தது" என்று, தெரிவிக்கப் பட்டிருந்த கருத்தினையும் இங்கு நினைவு கூறுதல் பொருத்தமான தாகும்.

## முஸ்லிம் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி

ஐ.தே.கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் போட்டி போட்டுக் கொண்டு முஸ்லிம் காங்கரஸின் ஆதரவைத் தேடிப்படையெடுத்தன. "முஸ்லிம் காங்கிரஸ் எந்தப்பக்கம்" என்ற கேள்வியே எங்கும் பரவலாக கேட்கப்பட்டது.

தொண்டமான் அவர்கள், ஒருபக்கம் ஐ.தே.கட்சியிலிருந்து கொண்டு சாதிக்கக்கூடியவற்றை சாதித்துக்கொண்டிருந்தார். அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை வலை வீசிப்பிடிப்பதற்கு பெரும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

திரு அனுரா பண்டாரநாயக்கா, ஐ.தே.க பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகரா ஒருபக்கமாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயகா, டி.மு. ஜயரட்ணா மறுபக்கமாகவும் கட்சிகளின் தூதுவர்களாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரோடு பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

## முஸ்லிம் காங்கிரஸ் எந்தப்பக்கம்?

இலங்கையின் வரலாற்றில் முஸ்லிம் சமூகத்தின் வாக்குப்பலத்தை மதித்த பேரினவாத சக்திகள், பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நமது காலடிக்கு வந்தது இதுதான் முதற்தடவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட, கிழக்கிலும் அதற்கு வெளியிலும் முஸ்லிம் காங்கிரஸுக்கு இருந்த வாக்குப்பலம் தான் முஸ்லிம் சமூகத்திற்காக பேரம் பேசும் சக்தியை நமக்கு தந்தது. இது, முக்கிய திருப்பமாகவும் முஸ்லிம் சமூகத்தின் வெற்றியாகவும் அமைந்தது.

முஸ்லிம் காங்கிரஸின் தீர்க்கதரிசனமான தலைமைத்துவத்தின் ஆற்றலும் திறமையும் தேசிய மட்டத்தில் பெரும் மதிப்பிற்கும் கௌவரத்திற்கும் உள்ளாக்கப்பட்டது.

எந்த பேரினவாத சக்தியும் அதன் முஸ்லிம் தரகர்களும் முஸ்லிம் காங்கிரைஸ "இனவாதக் கட்சி" என்றும் "அதன் தோற்றத்தால் பெரும்பான்மை சமூகங்களின் கோபத்திற்கு உள்ளாக நேரிடும்" என்றும் கூறினார்களோ, அவர்களின் வாய்களினாலேயே "அப்படி இல்லை. முஸ்லிம் காங்கிரஸும் ஒரு தேசிய சக்தி" என்று சொல்லவைத்ததற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நாம் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளோம்.

இரண்டு பெரும் அரசியல் சக்திகளிடமும் ஒரே வகையான கோரிக்கைகளை முன்வைத்தே தலைமைத்துவம் பேச்சுவார்த்தைகள் நடத்தியது. அதிஷ்டவசமாக முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தையும் அதன் அபிலாஷைகளையும் பொதுஜன ஐக்கியமுன்னணியே அங்கீகரித்தது.

## பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்பு

ஐ.தே.கட்சியின் பிற்போக்கு முஸ்லிம் அரசியல் தரகர்களைப் போலவே, பொதுஜன ஐக்கிய முன்னணியிலும் பெயருக்கு இருந்துவந்த பிற்போக்கு முஸ்லிம் தரகர்களும் "சந்திரிக்கா - அஷ்ரஃப்" உடன்படிக்கை நிறைவேறுவதைத் தடுப்பதற்கு பெரிதும் பிரயத்தனம் செய்தனர்.

ஆயினும் கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பு ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் செய்து கொள்ளப்படுவதற்கிருந்த "டிபிஏ" ஒப்பந்தம் முறிக்கப்பட்டதால் ஏற்பட்ட கசப்பான விளைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவத்தால் மிகவும் உணரப் பட்டிருந்ததால் எந்தச் சக்தியினாலும் "சந்திரிக்கா - அஷ்ரஃப்" உடன்படிக்கையை குலைக்க முடியவில்லை.

## பேராளர் மாநாட்டுத்தீர்மானம்

இதற்கு மத்தியில் கட்சியின் பேராளர் மாநாடு கொழும்பில் கூட்டப்பட்டது. கருத்துக்கள் அறியப்பட்டன. "பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் உடன்பாடு" அல்லது, "ஐ.தே.கட்சியுடன் உடன்பாடு" அல்லது "தனித்துவமாக பொதுத் தேர்தலை நாடுமுழுவதும் எதிர்கொள்வது" அல்லது "வடகிழக்குக் வெளியே தொண்டமானுடன் உடன்படுவது" போன்ற, கருத்துக்கள் ஆராயப்பட்டன.

மாநாட்டில், "பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் உடன்பட வேண்டும்" என்றும் அதே வேளை, "கிழக்கில் தனித்துவமாக நிற்க வேண்டும்" என்ற, கருத்தே மிகவும் மேலோங்கியிருந்தது. ஆயினும் இறுதி முடிவை தலைமைத்துவத்திடமும் அரசியல் அதிஉயர் பீடத்திடமும் விடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பேராளர் மாநாட்டைத் தொடர்ந்து, "மாவட்டங்கள் தோறும் எந்தெந்த வேட்பாளர்களை நிறுத்துவது" என்று, அரசியல் அதிஉயர்பீடம் கூடி ஆராய்ந்தது.

அம்பாறை மாவட்டத்தில் யார் யாரை நிறுத்துவது? என்றும் ஆராயப்பட்டது. அதில் ஒருவராக பொத்துவில் பிரதேசத்தை சேர்ந்த காஸிம் மௌலவி அவர்களையும் நிறுத்த வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு அவரின் அபிப்பிராயமும் கோரப்பட்டது.

தனது மருமகன் தேர்தலுக்கு நிற்பார் என்றும், அவர் முன்வராத பட்சத்தில் தான் போட்டியிடுவதாகவும் அவர் சம்மதம் தெரிவித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ்காரரின் வருகை

அடுத்த நாள், காஸிம் மௌலவியிடமிருந்து எனக்கு ஒரு டெலிபோன்கோல் வந்தது. தானும் மருமகனும் தேர்தலுக்கு தயாராக இருந்த போதும் பொத்துவில் மக்களினதும் சமூகத்தினதும் நன்மைகருதி வேறொரு வேட்பாளரை நிறுத்துவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று, என்னிடம் கேட்டார்.

அவர் யாராக இருக்க முடியும்.? என்று என்னால் ஊகிக்க முடிந்தது. அந்த பொலிஸ்காரரின் பெயரை அவர் உச்சரித்தார்.

"எனக்கு அவரை நம்பமுடியாமல் இருக்கிறதே" என்று, அவரின் கடந்தகால சமீபத்திய கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை நினைவுபடுத்தினேன்.

அவர் இப்போது கட்சித்தலைமைத்துவத்திற்கும் கட்சிக்கும் விசுவாசமாக பேசுகிறார் என்றும், "இன்னும் ஒருமுறை சமூகத்திற்கு துரோகம் செய்ய முடியாது! எப்படியாவது, அம்பாறை மாவட்டத்தில் மூன்று முஸ்லிம் பிரதி நிதித்துவத்தையும்பெற்றே தீரவேண்டும்!" என்று கூறும் அவர், கட்சியில் சேர்ந்து உழைக்கவும் போட்டியிடவும் தயாராக இருக்கிறார். "அவர் கட்சியில் சேர்ந்தால், கட்சிக்கு பக்கபலமாகவும் இருக்குமே" என்று, மௌலவி என்னிடம் கூறினார்.

"அவரை வரச்சொல்லுங்கள் நீங்களும் வாருங்கள்" என்று கூறினேன்.

## எனது வீட்டிற்கு வந்தார்

அடுத்த நாளிரவு காஸிம் மௌலவியோடு, அந்த பெரிய பொலிஸ்காரரும் அவரின் மச்சானும், எனது, பாடசாலை

நண்பனுமான சாய்ந்தமருது மீராசாஹிபு அவர்களும் எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளரும் அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளராக நிற்கின்ற ஏ. அதாவுல்லா அவர்களும் கட்சியின் பொருளாளர், அல்ஹாஜ் எம்.ரி.ஹசன் அலி அவர்களும் அந்த பேச்சுவார்த்தையின் போது சமூமளித்திருந்தார்கள்.

## ஏதோ ஓர் உள்ளுணர்வு

உண்மையில் அவரின் வருகையை இட்டு நான் மகிழ்ச்சியடைந்திருந்தேன். அல்லாஹ் அவருக்கு 'ஹிதாயத்தை" கொடுத்து விட்டான் என்று, நம்பினேன். ஆயினும், ஏதோ ஓர் உள்ளுணர்வு என்னை இலேசாக நெருடிக்கொண்டிருந்தது. அவரின் வருகையில் மிகவும் நம்பிக்கை வைத்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம்.

## முகமூடி அணிந்திருந்தோர்

மிகவும் நம்பிக்கை தரக்கூடிய விதமாக கவர்ச்சியாக கவனமாகப் பேசினார். முஸ்லிம் சமூகத்திற்கு முதுகில் குத்துகின்ற ஐ.தே.கட்சியின் துரோகத்தனங்களையும், சிங்கள, பௌத்த பேரினவாதம் கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் மேற்கொண்டு வருகின்ற ஆக்கிரமிப்புகளையும் கடுமையாக விமர்சித்தார். கண்மூடித்தனமான தமிழ் விரோதப்போக்கும் அவரது பேச்சில் தொனித்தது. புலிகளின் போராட்டத்திலுள்ள நியாயங்களை அறவே கணக்கெடுக்காமல் அரசைப் போலவே அவரும் பயங்கரவாதத்தை மாத்திரம் தூக்கிப்பிடித்துக்கொண்டு கதைத்தார். அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்சிங்களப் பேரினவாதத்தின் கபடத்தனமான குடியேற்றத்தை கண்டித்தார். இந்த நாட்டில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரேயொரு மாவட்டமான அம்பாறை பறிக்கப்பட்டிருப்பதையும், தேசிய மட்டத்தில், வடகிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் உரிமைகள்

மறுக்கப்படுவதையுடம் ஆக்ரோஷமாகப் பேசினார். முஸ்லிம் அரசியல்தனித்துவத்தின் அவசியத்தையும் அதன் தலைமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவத்தின் தீர்க்கதரிசனமான முடிவுகளையும் பாராட்டினார்.

சுருக்கமாக சொன்னால், "முஸ்லிம் காங்கிரஸின் பிரச்சாரத்திற்கும், முஸ்லிம் சமூகத்திற்கு தலைமை கொடுப்பதற்கும் இனி ஆருமே தேவையில்லை" என்பதுபோல, அவரின் பேச்சு அமைந்திருந்தது.

அம்பாறை மாவட்டத்தின் மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும், எப்படியாவது காப்பாற்றியே தீரவேண்டும்! என்றும் அதை அடைவதற்கான தந்திரோபாயங்களை வகுக்க வேண்டும் என்றும் கூறினார்.

## பூனை கண்ணை மூடிக்கொண்டு

அத்துடன், தான் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்காக தஸ்தாவேஜுகளை தயாரித்திருப்பதாகவும் அதை ஒப்படைப்பதற்கான முயற்சிகளில் துரிதமாக இறங்கியிருப்பதாகவும் ஆனால் அதை தந்திரமாக சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டியிருக்கிறது என்றும் கூறிக் கொண்டார்.

நான் ஓய்வு பெற்றுவிட்டு, "முஸ்லிம் காங்கிரஸில் தேர்தல் கேட்கப்போகிறேன் என்று, அரசின் மேலிடத்துக்கும் குறிப்பாக மன்சூருக்கும் தெரியவந்தால் அவசரகால சட்டத்தைக்காட்டி எனது ஓய்வுபெறும் விண்ணப்பத்தை நிராகரிக்கவும் கூடும்" என்றும் கூறினார்.

இந்த விஷயத்தில் அவர்கூறிய நியாயம் அவர் ஒழித்து விளையாடுவதற்கு எடுக்கும் முயற்சி போலவும், "பூனை கண்ணை மூடியபடி பாலைக்குடித்துக்கொண்டு, பூலோகம் இருண்டு கிடக்கிறது" என்று, கூறுவது போலவுமே எனக்குப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவரின் வருகையைப்பற்றிய சந்தேகம்

அதைத்தொடர்ந்து, அவரைப்பற்றி எனக்கு இருந்த சந்தேகத்தையும் அவர் முகத்திலேயே கேட்டுவைத்தேன்.

"உங்களின் வருகையைப்பற்றி பரவலாக ஒரு சந்தேகம் கிளப்பபட்டுள்ளது" என்று கூறி, "உங்களின் பதவி உயர்ச்சியை அரசாங்கத்திடமிருந்து நிச்சயித்துக் கொள்வதற்காகவே நீங்கள் முஸ்லிம் காங்கிரஸின் பக்கம் வருவதாக பேசப்படுகிறதே.." என்று கூறினேன்.

அதற்கு அவர், "புறமோஷன் எனக்கு கிடைக்கவேண்டிய உரிமை என்றும், அது எனக்கு மறுக்கப்பட்டிருப்பதால், அதற்காக போராடிக்கொண்டிருக்கிறேன் என்பதை மறுக்கவில்லை" என்றும் கூறியதோடு, "எனது சமூகத்தின் எதிர்காலத்திற்காக முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டு போட்டியிடுவதற்கு முன்வந்திருக்கிறேன்" என்றும் கூறிவைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமல்ல, மட்டக்களப்பு மாவட்டத்திலும் பிரதேச சபைத் தேர்தலின் போது ஐ.தே. கட்சிக்கு ஆள்தேடி அவர் வீடு வீடாக ஏறி இறங்கித் திரிந்ததையும் நான் அவருக்கு நினைவு படுத்தினேன். அப்போது அவர் "அரசாங்கத்தின் தொடர்பு அதிகாரியாக இருந்ததால் அந்தக்கடமையைச் செய்வது என்னால் தவிர்க்க முடியாமற் போய்விட்டது" என்று, கூறினார்.

## மீராசாஹிபின் உளத்தூய்மை

அவருடன் வந்திருந்த அவரது மச்சான் மீராசாஹிபு அவர்கள், உளத்தூய்மையுடன் தனது கருத்துக்களை அப்போது கூறினார்.

"யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்றைக்கு கிழக்கில் இருப்பது முஸ்லிம் காங்கிரஸ் அலைதான்! வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரு எந்தக்கட்சியில் வந்தாலும் எதுவும் செய்ய முடியாது! பிரதேச சபைத் தேர்தலில் அரைத்த மிச்சக் குரக்கனைத்தான் அமைச்சர்மார் இந்தத் தேர்தலில் அரைக்க வேணும்! எலக்ஷனுக்கு நின்று அதில் வெல்ல வேணுமென்டால் உள்ள ஒரே ஒரு மார்க்கம் முஸ்லிம் காங்கிரஸ் தான்! அதை நான், மச்சானுக்கு சொல்லிப் போட்டன். இவ்வளவு காலமும் புறமோசன் தராதவங்களா இனித்தரப்போறாங்க?" என்று, அவர் கேட்டு வைத்ததோடு, "முஸ்லிம் காங்கிரஸில் வந்தால் மாத்திரம்தான் எனது உறவும் தயவும் இவருக்கு இருக்கும். இந்த எலக்ஷனிலும் முஸ்லிம் சமூகத்தை காட்டிக் கொடுக்கிறதுக்கு நாங்க றெடியில்ல!" என்றும் கூறி வைத்தார்.

எல்லாத்துக்கும் இந்த "றிட்டயர் மென் பேப்பரை" போட்டு எடுத்துக்கும் வரைக்கும் கொஞ்சம் பொறுக்க வேணும் என்றும் அப்படியில்லாவிட்டாலும் கூட முஸ்லிம் காங்கிரஸில் சேருவதும் அதில் போட்டியிடுவதும் சத்தியம்!" என்றும், மீராசாஹிபு அடித்துக் கூறினார்.

அன்றிரவு நள்ளிரவு வரை ஏறக்குறைய மூன்று மணித்திலாயங்களுக்கு மேலாக அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்தது. முடிவில், தலைவருடன் கதைப்பதற்கு நேரம் எடுத்துத்தருவதாகப் பொருந்திக் கொண்டேன்.

## தலைவர் பொலிஸ்காரர் சந்திப்பு

அதன்படிக்கு, தலைவரின் "சமிட்பிளட்" வீட்டில், சந்திப்பு நிகழ்ந்தது. இதற்கிடையில் பொத்துவில் அமைப் பாளர் எம்.பி.ஏ. அஸீஸ் அவசர அவசரமாக ஊரிலிருந்து அழைக்கப்பட்டு அவரும், காஸிம் மௌலவி, மீராசாஹிப், அந்தப் பொலிஸ்காரர் உட்பட அரசியல் அதிஉயர் பீட உறுப்பினர்களான எச்.எம்.பாறூக், றஊப் ஹக்கீம், எம்.ரீ.ஹசன் அலி, ஏ.அதாவுல்லா, யூ.எல்.எம். முஹியத்தீன், எம்.எச்.எம். நியாஸ் ஆகியோரும் அட்டாளச்சேனை அமைப்பாளர் ஏ. அபூசாலிஹ், அட்டாளச்சேனை பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைத்தலைவர் ஏ. நூறுலெப்பை, புஹாரி மௌலவி உட்பட இன்னும் பலரும் அச்சந்திப்பின் போது கலந்து கொண்டனர்.

## கட்சியின் கொள்கை விளக்கம்

தலைவர், கட்சியின் கொள்கைகளையும் அதன் யாப்பு, ஒழுக்க நெறிக் கோவை முதலியவற்றையும் எடுத்துக் கூறியதோடு கட்சியின் கட்டமைப்பு, கண்ணியப்படுத்தப்பட வேண்டிய அதன் உயர் வரிசை என்பவற்றையும் விளக்கி அரசியல் அதிஉயர்பீட உறுப்பினர்களை அறிமுகமும் செய்து வைத்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருக்கும் உடன்பாட்டையும் எடுத்துக் கூறினார். சந்திரிக்கா-அஷ்ரஃப் உடன்பாட்டின் மூலம் சிங்களப் பேரினவாதத்தின் போக்குகள் மாற்றப்பட்டு வருவதுடன் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்களைப் பற்றிய புரிந்துணர்வும், "முஸ்லிம் காங்கிரஸ் எங்கள் சகோதரக்கட்சி" என்று, கூறுகின்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது! என்றும், குறிப்பிட்டார்.

அந்த பொலிஸ்காரரும் மனம் திறந்து கதைத்தார். தீவிர முஸ்லிம் அரசியல் ஞானி போலவும், ஒரு பெரும் சாணக்கியன் போலவும் பேசினார். அப்படித்தான் நம்ப வேண்டியிருந்தது.

## தலைவரின் உறுதிமொழி

தலைவரோடு தனிமையாக கதைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கதைத்தார். அதன்பின்பு பொத்துவில் பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் அஸீஸும் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர் காஸிம் மௌலவியும் ஓர் உடன்பாட்டுக்கு வந்து அந்த பொலிஸ்காரரையே வேட்பாளராக நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் அந்தப் பொலிஸ்காரர் மீது, "சிலருக்கு, சமூகம் சார்பாக இருந்த வந்த ஒரு போலிக் கவர்ச்சியை உரைத்துப்பார்ப்பதற்கு" சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தேர்தலில் போட்டியிடுவதற்கான அவர் தனது பொருளாதாரக் கஷ்டத்தை தலைவரிடம் முன்வைத்த போது, உடனடித்தேவையாக காஸிம் மௌலவி 50,000 ரூபா வை உதவுவதாகவும், ஏனைய தேவைகளுக்கு - வாகனம் உட்பட தலைவர் ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தார்.

## சத்தியத்தை மீறினார்

சமூகத்தை காட்டிக்கொடுக்க விரும்பாத - அதேவேளை, உயர் பதவியையும் தேடிக் கொண்டிருந்த - மூன்று தனித்துவமான முஸ்லிம் பிரதிநிதிகளை எவ்வாறாயினும் காப்பாற்ற வேண்டுமென்ற - அம்பாறை மாவட்டத்தில் திட்டமிட்ட, திட்டமிடப்படாத சிங்களக் குடியேற்றத்தை தடுக்க வேண்டுமென்ற - முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசத்தை காப்பாற்ற வேண்டுமென்ற - முஸ்லிம் அரசியல் தனித்துவத்தில் அபார நம்பிக்கை வைத்திருப்பதாக கூறிய - தலைமைத்துவத்தில் பூரண நம்பிக்கை வைத்திருப்ப தாக சொன்ன - அந்தப் பொலிஸ்காரர், தலைமைத்து வத்துடனும் ஏனைய முக்கியஸ்தர்களுடனும் ஸலாம் கூறிய தோடு தலைவரைக் கட்டித்தழுவி "இனி நம்மை மௌத்துத் தான் பிரிக்க முடியும்" என்று, தலைவரின் கையில் சத்தியம் செய்து "துஆ" பிரார்த்தனையுடன் விடை பெற்றார்.

## சந்தேகம் கிளப்பப்பட்டது

இதற்கிடையில், அவரின் வருகையினால் குறிப்பாக, அக்கரைப்பற்று அட்டாளச்சேனை சம்மாந்துறை பிரதேச சபைகளின் கட்சி முக்கியஸ்தர்களின் மத்தியில் எழுந்த சலசலப்புக்கும் சந்தேகங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவர்களிடம் "எதிர்வரும் அம்பாறை மாவட்ட தேர்தலில் ஒருநூறு வாக்குகளுக்குத்தானும் "றிஸ்க்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க முடியாது" என்ற, பதிலையே திட்டவட்டமாக கூற வேண்டியிருந்தது.

"என்ன இருந்தாலும் அவரின் பொலிஸ்காரப்புத்தியைக் காட்டமாட்டாரா...?" என்ற பலத்த சந்தேகம் கிளப்பப்பட்டு, "எதற்கும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!" என்று, எமக்கு கூறப்பட்டது. ஆயினும் அந்தப் பொலிஸ் காரரோடு பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கு முன்பே அவரைப்பற்றிய அவநம்பிக்கை எனது மனத்தில் இலேசாக ஊசலாடிக்கொண்டிருந்ததுதான் என்றாலும..... ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் "சமூகத்தின் ஒற்றுமை தனித்துவமான மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவம் இந்த தேர்தலில் றிஸ்க் எடுக்க முடியாது" என்ற காரணங்களுக்காகவே அவரோடும் பேச்சுவார்த்தைகளில ஈடுபட்டோம்.

## துரோகிகளையும் எதிரிகளையும் சேர்க்கச் சொன்னார்.

அடுத்த நாள், அந்தப் பொலிஸ்காரர் எனது வீட்டிற்கு டெலிபோனில் தொடர்பு கொண்டார். "அம்பாறை மாவட்டத்தில் மூன்று தனித்துவமான முஸ்லிம் பிரதிநிதிகளை வென்றே தீரவேண்டும்! அதற்காக, மேலும் நாம் தந்திரோபாயங்களை கையாள வேண்டும். நமக்கு எதிராக நிற்பவர்களை சேர்த்தெடுக்க வேண்டும். அதற்கு உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று, என்னிடம் கேட்டார்.

"அதற்காகத்தானே உங்களையும் கட்சியில் சேர்த்துக் கொண்டோம்" என்று கூறினேன். நீங்கள் யாரைக் குறிப்பிடு கிறீர்கள்! என்று, கேட்ட போது "நிந்தவூர் முஸ்தபாவையும கட்சியில் சேர்த்துக்கொண்டால் என்ன? என்று என்னிடம் கேட்டார்.

அதற்கு, "நீங்களும் எம்பியாகி, அவரும் எம்பியாவது சாத்தியமாகுமா?" என்று கேட்டதற்கு, "அப்படியில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வெளிநாடு ஒன்றிற்கு தூதுவராக அல்லது மாகாண சபை ஒன்றிற்கு ஆளுநராக்குவது என்று, வாக்குறுதி அளித்து, அவரையும் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாமே" என்றார்.

## விலாங்கு அரசியல்வாதி

அதற்கு நான், "நீங்கள் அந்த அடிப்படையில் அவரிடம் கதையுங்கள். தலைவருடன் பேசுவதற்கு நேரம் எடுத்துக் கொடுப்போம்." என்று, நான் அவருக்கு கூறினேன். ஆனாலும் அந்த "அரளைபெயர்ந்த" விலாங்கு அரசியல் வாதியில் எங்களுக்கு அறவே நம்பிக்கையில்லை! என்றாலும், நீங்கள் அவருடன் கதையுங்கள் என்றும் கூறினேன்.

அதன்பின்பு ஜனாப் முஸ்தபா அவர்களுடன் அவர் கதைத்தார். தலைவரோடு தொடர்புகொண்டு பேச்சு வார்த்தைக்கு இடமும் நேரமும் பெற்றுக் கொண்டார்.

ஆயினும், "அந்த பொலிஸ்காரரின் வருகை, அவரது பதவி உயர்ச்சியை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தது போலவே, முஸ்தபா வின் வருகையிலும் "ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியலில் அவரது பெயரை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக இருக்குமோ..?" என்ற, சந்தேகமும் எனக்குள் வலுத்தது.

ஆயினும் குறிப்பிட்டபடி குறிப்பிட்டவேளையில் தலைவருக்கும் முஸ்தபாவுக்குமிடையில் சந்திப்பு நிழ்ந்தது.

"எவ்வாறாயினும் பாராளுமன்றத்துக்குள் செல்வதற்கு ஒரு ஷோட்கட்டை காட்ட முடியாதா?" என்று, கேட்கும் மனநிலையில் அவர் இருந்ததாகவே அவரைப்பற்றி அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரது நடமாட்டத்தில் சந்தேகம்

இது, இவ்வாறிருக்க, இன்னும் கட்சிக்குள் காலெடுத்து வைக்காமலும் வேட்பாளர் தெரிவுக்குழுவுக்கு முகம் கொடுக்காமலும் ஓய்வு பெறுவதற்கான அனுமதியை இன்னும் பெறாமலும் அந்தப்பொலிஸ்காரர் இருந்தார்.

அவ்வாறு காணப்பட்ட அந்த பொலிஸ்காரர், அம்பாறை மாவட்டத்தில் கட்சியைக்காப்பாற்ற வந்த ஆபத்பாந்தவனைப் போல செயற்பட்டுக்கொண்டிருப்பதாகவே நாம் நினைக்க வேண்டியிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் இவரின் நடமாட்டம் பற்றிய ஊர்ஜிதமான தகவல்கள் எமது கட்சியின் புலனாய்வாளர்களிடமிருந்து கிடைக்கத்தொடங்கியிருந்தன.

ஐ.தே.கட்சியின் முகாம்களுக்கு அவர் சென்று வந்ததும் அதன் அமைச்சர்களை சந்தித்து வந்ததும் எமக்கு ஊர்ஜிதமாக தெரியவந்தது.

## துரோகிகளையும் காட்டிக் கொடுத்தவர்களையும் சேர்க்க சொன்னார்

இதற்கிடையில், கட்சியின் தலைமையகத்தில் வேட்பாளர் நியமனங்களுக்கான நேர்முகப்பரீட்சை அன்று நடந்து கொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பொலிஸ்காரரின் தொலைபேசி அழைப்பொன்று தலைவருக்கு வந்தது.

அந்த தொலைபேசி உரையாடலின் போது, கட்சியின் தலைமைத்துவத்திற்கும் கட்சிக்கும் துரோகம் செய்து, கட்சியை காட்டிக்கொடுக்கவும் முற்பட்டதற்காக கட்சியிலிருந்து விலக்கப்பட்ட ஒருவின் பெயரும், கட்சியினால் நன்மைகளைப் பெற்றுக் கொண்டு உளவாளியாக செயற்பட்டு விலக்கப்பட்ட

மற்றும் இருவரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டு அவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கட்சிக்குள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## பலத்த சந்தேகம் ஊர்ஜிதமாகியது

அப்போது அங்கு குழுமியிருந்த அரசியல் அதிஉயர் பீட உறுப்பினர்களுக்கு அந்த உரையாடல் பெரும் ஆச்சரியத்தையும் அந்த பொலிஸ்காரர் மீது அவ நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

அதைத் தொடர்ந்து, அந்தப் பொலிஸ்காரரின் வருகையிலும் நடவடிக்கைகளிலும் எனக்கு பலத்த சந்தேகம் ஏற்படத் தொடங்கியது.

கட்சிக்குள் உளவாளியாக ஊடுருவி, உறவாடி கட்சியை உடைப்பதற்கு ஐ.தே.கட்சியின் உளவாளியாச் செயற்படுகின்றாரோ என்ற நியாயமான சந்தேகம் எனக்கு ஊர்ஜிதமாகியது.

இந்தப் பொலிஸ்காரரோடு, கட்சியினதும் சமூகத்தினதும் எதிரிகளும், துரோகிகளும் கட்சியின் தலைமைத்துவத்தையும் கட்சியையும் அழிப்பதற்கு ஒரு வியூகம் அமைத்துக் கொண்டு வருவது போல் நான் உணர்ந்தேன். ஆயினும், இன்னும் நம்பிக்கையை தளரவிடாமல், அந்தப் பொலிஸ்காரரை வேட்பாளர் நியமன தெரிவுக்குழுவுக்குமுன் சமூகமளிக்கும்படி கேட்டிருந்தோம். எதிர்பார்த்தது போல, அவர் சமூகமளிக்கவில்லை. அத்துடன் அவரின் முகமூடி கிழிக்கப்பட்டது.

## துரோகிகளுக்கு பாடம் புகட்ட வேண்டும்

இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் தேர்தலில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகம், அவரது சமூக முகமூடி போட்ட துரோகத்தனத்திற்கு தக்கபாடம் புகட்டுவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

அடுத்தநாள் அவசர அவசரமாக காஸிம் மௌலவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பொத்துவிலிலிருந்து அழைக்கப்பட்டு வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

## மீராசாஹிபின் சத்தியப்பிரகடனம்

இந்தப் பொலிஸ்காரரோடு கூடவே வந்து, அவரில் நம்பிக்கை வைத்து அவருக்கு நியமனம் கேட்டு அத்தனை சந்திப்புக்களிலும் பேச்சுவார்த்தைகளிலும் கூடவே இருந்து கலந்து கொண்ட அன்புக்குரிய நண்பர், சாய்ந்தமருது மீராசாஹிப் அவர்கள் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு வந்து தலைவரையும் எம்மையும் சந்தித்தார்.

அந்தப் பொலிஸ்காரர் செய்த, அத்தனை ஏமாற்றம், துரோகங்களுக்காகவும் மனமுருகி கண்ணீர் வடித்து நாத்தளுதளுக்க மன்னிப்புக் கேட்டார்.

நடந்த அத்தனை சம்பவங்களையும் அப்படியே எழுதி மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதை நான் எனது பெயரிலேயே வெளியிட வேண்டும் என்று தலைவரிடம் வினயமாக வேண்டிக் கொண்டார். அந்தப் பொறுப்பு என்னிடம் பாரப்படுத்தப்பட்டது. அதன் விளைவாகவே இந்த "யாரிந்த பொலிஸ்காரர்?" என்ற சத்தியப்பிரசுரம் எழுதப்பட்டது.

கட்சியின் அங்கத்துவப்படிவத்தை வேண்டிக் கொண்ட சகோ. மீராசாஹிபு அவர்கள், அதை நிரப்பி அங்கத்தவராக சேர்ந்துகொண்டதோடு அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் காங்கிரஸ் மேடைகளில் ஏறி இந்தப் பொலிஸ்காரர் செய்த சமூகத்துரோகத்தை மக்களுக்கு அம்பலப்படுத்துவேன்! என்றும் தலைவரின் கைகளில் அடித்து சத்தியமும் செய்து கொண்டார்.

அல்லாஹ் சமூகத்துரோகிகளிடமிருந்து நம் அனைவரையும் காப்பாற்றுவானாக! ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

இது அன்புடன் உங்கள் சகோதரன்,

**கவிஞர் மருதூர்க்கனி**

19. 07. 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிழக்குக் கடலில் பொங்கியே - எழும்
மாரிக்கடல் அலை போலவே
கிழக்கு மண்ணில் பொங்கிடும் - எங்கள்
முஸ்லிம் சமூக எழுச்சியை
தடுக்கலாமென நினைத்திடும் - சிறு
தூசு - துரோகக் கும்பலை
முடிக்கலாம்!! முழுப்பலத்தையும் - நாம்
ஒன்று திரட்டிக் காட்டுவோம்!!"

- ஜனதாஸன்

Typesetting & Printing Crescent Publications (Pvt) Ltd. Co - 2. Phone: 422771 / 331916

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org